भारत का राजपत्र

# The Gazette of India

इंडिय அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, गुरूवार, 9, जून 1994/1916 शाका

New Delhi, Thursday, 9th June, 1994/1916 Saga

புது தில்லி, 1994, ஜூன் 9, வியாழக்கிழமை/1916 சக


**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**

*(சட்டமியற்றுத் துறை)*

புது தில்லி

The translation in Tamil of the Judges (Protection) Act, 1985 (59 of 1985), The Indian Partnership Act, 1932 (9 of 1932), The Government Savings Bank Act, 1873 (5 of 1873), The Sale of Goods Act, 1930 (3 of 1930), The Public Provident Fund Act, 1968 (23 of 1968) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

நீதிபதிகள் (காப்பளிப்புச்) சட்டம், 1985 (59/1985), இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932 (9/1932), அரசாங்கச் சேமிப்பு வங்கிகள் சட்டம், 1873 (5/1873), சரக்குகள் விற்பனைச் சட்டம், 1930 (3/1930), பொதுமக்கள் வருங்கால வைபபு நிதியச் சட்டம், 1968 (23/1968) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[ Price Rs. 30-00

## பொதுமக்கள் வருங்காலவைப்பு நிதியச் சட்டம், 1968

### (சட்ட எண் 23/1968)

[1968, மே 16]

பொது மக்களுக்காக வருங்காலவைப்பு நிதியம் ஒன்றை நிறுவுவதற்கு வகைசெய்வதற்கான சட்டம்.

இந்தியக் குடியரசின் பத்தொன்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

குறுந்தலைப்பு மற்றும் அளாவுகை.

1. (1) இந்தச் சட்டம், பொதுமக்கள் வருங்காலவைப்பு நிதியச் சட்டம், 1968 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி—

(அ) ''நிதியம்'' என்பது, இந்தச் செயல் திட்டத்தின்படி நிறுவப்பெற்ற பொதுமக்கள் வருங்காலவைப்பு நிதியம் என்று பொருள்படும் ;

(ஆ) ''உரிமைவயதடையாதவர்'' என்பது, இந்திய உரிமைவயதுச் சட்டம், 1875இன்படி உரிமைவயதை அடைந்திருப்பவராகக் கொள்ளப்பெறாத ஒருவர் என்று பொருள்படும் ; 9/1875

(இ) ''செயல் திட்டம்'' என்பது, பிரிவு 3இன் உட்பிரிவு (1)இன்படி உருவாக்கப்பட்ட பொதுமக்கள் வருங்காலவைப்பு நிதியச் செயல் திட்டம் என்று பொருள்படும் ;

(ஈ) ''தொகையளிப்புநர்'' என்பது, பிரிவு 4 இன்படி நிதியத்திற்குத் தொகையளிப்புச் செய்கிற ஒருவர் என்று பொருள்படும்; உரிமை வயதடையாதவரின் காப்பாளராக இருக்கிற ஒருவர், அந்த உரிமைவயது அடையாதவரின் சார்பாக அத்தகைய தொகையளிப்புச் செய்கிறவிடத்து, அந்த உரிமைவயதடையாதவர் என்று பொருள்படும்;

(உ) ''ஆண்டு'' என்பது, நிதியாண்டு என்று பொருள்படும்.

பொது மக்கள் வருங்கால வைப்பு நிதியச் செயல் திட்டம்.

3. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, பொதுமக்களுக்கு ஒரு வருங்காலவைப்பு நிதியத்தை நிறுவுவதற்காக பொது மக்கள் வருங்காலவைப்பு நிதியச் செயல் திட்டம் என்று வழங்கப்படும் ஒரு செயல் திட்டத்தை உருவாக்கலாம்; அந்தச் செயல்திட்டம் உருவாக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும், இச்செயல்திட்டத்திற்கும் இணங்கிய வகையில் நிதியமொன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, இந்தச் செயல் திட்டம், இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம்.

(3) இந்தச் சட்டம் அல்லாத, நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள பிற சட்டத்தில், அல்லது இந்தச் சட்டம் அல்லாத பிற சட்டத்தின் பயன்திறனால் செல்திறம் உடைய முறையாவணம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் செயல்திட்டம் செல்திறம் உடையது ஆகும்.

(4) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கை வாயிலாக, அவ்வப்போது இந்தச் செயல்திட்டத்தில் எதனையும் சேர்க்கலாம், அதில் திருத்தம் செய்யலாம் அல்லது அதை மாற்றுகை செய்யலாம்.

நிதியத்திற்குத் தொகையளிப்பு.

4. உரிமைவயதடையாத ஒருவரின் காப்பாளராக இருக்கிற ஒருவர் தம் சார்பாகவோ அந்த உரிமைவயதடையாதவரின் சார்பாகவோ, இந்தச் செயல் திட்டத்தில் குறித்துரைக்கப்படும் முறையிலும் குறித்துரைக்கப்படும் மேல்வரம்பு, கீழ்வரம்புகளுக்கு உட்பட்டும், அந்த நிதியத்திற்குத் தொகையளிப்புச் செய்யலாம்.

வட்டி.

5. பிரிவு 4 இன்படி செய்யப்பட்ட தொகையளிப்பு அனைத்தும், மைய அரசாங்கத்தால் அதிகாரமுறை அரசிதழில் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படும் வீதத்தில் வட்டியைப் பெறுவதாக இருக்கும்; அந்த வட்டி, இந்தச் செயல் திட்டத்தில் குறித்துரைக்கப்படும் முறையில் கணக்கிடப்படுதல் வேண்டும்.